ஓ. எம். சுப்பிரமணியன்,

Regd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு

# குடிஅரசு

Estd 1924.

பக்கங்கள் 8. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-6

மலர் 20 } ஈரோடு 12-10-1946 புரட்டாசி மீ 26௳ { இதழ் 1

## கும்பகோணத்தில் பெரியார் சொற்பொழிவு

★

கும்பகோணத்தில் 18-8-46ந் தேதி மாலை 6 மணிக்கு காங்கேயன் பார்க்கில், தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடந்த பத்தாயிரம் மக்கள் கொண்ட பொதுக்கூட்டத்தில், பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு:-

தலைவர் அவர்களே, தாய்மார்களே! இக்கூட்டம் திராவிடப் பொதுமக்கள் சார்பாக சர் ஏ. டி. பன்னீர்செல்வம் வாசகசாலையினால் கூட்டப்பட்டதாகும். இதில் இக்கால அரசியல் நிலையைப்பற்றிப் பேசக் கேட்டுக்கொண்டுள்ளார்கள். இன்று திராவிடர் கழகமாக மாற்றப்பட்டுள்ளது, முன்பு, 'தென் இந்திய நலஉரிமைச் சங்கம்' என்னும் பெயரினை யுடையதாக இருந்தது. தென் இந்தியர் என்றால் திராவிடர்கள் என்று சரித்திரம் சான்று சொல்வதற்கேற்ப, நமது இயக்கத்திற்கு திராவிடர்கழகம் எனப் பெயரிடப்பட்டிருக்கின்றது. திராவிடர்கழகம், நமது நாடு, பூர்ண விடுதலை அடையவே பாடுபட்டு வருகின்றது. அதாவது பொருளாதாரத்தில் சமூகத்துறையில் நமக்கு சரிசமத்துவ உரிமை வேண்டும், அன்னிய ஆதிக்கம் சுரண்டுதலும் கூடாது என்பதாகும். காங்கரஸ்காரர்களும் அதையேதான் கேட்கின்றார்கள். அப்படி இருக்க உங்களுக்கெனத் தனிக் கழகம் ஏன்?' என உங்களுக்கு ஐயப்பாடு தோன்றலாம். அதற்கு எனது பதில் இதுதான். என்னைப் பொருத்தவரையில் நான் ஒரு வியாபாரியாக, சுகபோகியாக, தன்னாசாக வாழ்ந்தவன். என் சொந்த நலனை விட்டுவிட்டு, முனிசிபல் சேர்மன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு காங்கரஸ் இயக்கத்தில் சேர்ந்து பல தடவை ஜெயிலுக்கும் போனேன். காங்கரசில் எனக்குப் பெருமை யில்லாமலோ, ஏமாற்றமடைந்தோ நான் அதைவிட்டு வெளிவரவில்லை. ஆனால் ஏன் அதை விட்டேன். எனது கவலை, இலட்சியம் யாதெனில் அன்னியன் என்றால் வெள்ளையன், பனியா, முல்தானி, மார்வாடி, காஷ்மீரி, குஜராத்தி ஆகிய இவர்கள் ஆதிக்கத்திலிருந்து அதாவது எந்தவித ஆரிய ஆதிக்கத்தில் இருந்தும் விலகுவதும், பிரிட்டிஷ்காரன், அமெரிக்கன், ரஷ்யன் மேல்கண்ட மார்வாடி, பனியா, பார்ப்பனன், மேல்லோகத்தான்" என்பவன் எவனும் நம்மைச் சுரண்டக்கூடாது என்பதாகும். "வெள்ளையனே வெளியேறு என்பதைப்பற்றி காந்தியார் அர்த்தம் சொல்லும்போது 'அவன் சுரண்டிக்கொண்டு வெளியே போகாமல் இங்கேயே இருப்பதைப்பற்றி கவலையில்லை" என்று சொல்லுகிறார். நாம் இங்கு உள்ள பார்ப்பனன் சமுதாயத்தின் பேரால், ஆரியத்தின் பேரால் சுரண்டக்கூடாது என்றும், மீறி எவன் சுரண்டினாலும் திராவிடநாட்டைவிட்டு வெளியே கொண்டுபோகக்கூடாது என்றும் சொல்லுகின்றோம். விளக்கமாக சென்னை மாகாணம் முழு சுயேச்சையுடன் இருக்கவேண்டும். பிர்லாக்கள், டாட்டாக்கள், மார்வாடிகள், சேருக்கள், வெள்ளைக்காரர்கள், யாராயிருந்தாலும், சென்னை மாகாணம் என்னும் திராவிடநாட்டு எல்லைக்குள் நுழையவேண்டுமென்றால் பாஸ்போர்ட் அனுமதிச்சீட்டு வாங்கிக்கொண்டு தான் உள்ளே நுழையவேண்டும். எந்த வடநாட்டானோ, அல்லது வேறு எந்த அன்னியனோ எங்கள் நாட்டுக்குத் தலைவனாகவோ ராஷ்டிரபதியாகவோ, மகாத்மாவாகவோ, இருக்கக்கூடாது. மனிதர்களெல்லாம் சமமாக வாழவேண்டும். மனித சமூகத்திலே, பறையனோ, சூத்திரனோ, சக்கிலியோ, பிராமணனோ, இழிஜாதியானோ இருக்கக்கூடாது. இத்தகைய கொள்கைகள் காங்கரசில் இருக்கின்றனவா? இதற்குக் காங்கரஸ் சம்மதிக்கின்றதா? அப்படி சம்மதிக்காவிட்டால் யார் பித்தலாட்டக்காரர்? யார் உண்மை விடுதலைக்கு, சமத்துவத்திற்கு எதிரிகள்?

உலகநாடுகளை பெற்றுள்ளதைப் போல நமது நாடும் சுதந்தரம் பெற்று தனி நாடாக இருக்கவேண்டும். நாலு கோடி மக்களிலே யார் வேண்டுமானாலும், மந்திரியாகவோ, மகாத்மாவாகவோ இருக்கட்டும். நம்மிலே அத்தகைய தகுதியுடையவர்கள் இல்லையா, நமக்கு அரசியல் தெரியும், பரம்பரை பரம்பரையாக அரசாண்டவர்கள் நாம். நமக்குக் கப்பலோட்டத் தெரியும். பரம்பரை பரம்பரையாகக் கப்பலோட்டி வாணிபம் செய்தவர்கள் நாம். பிறன் ஆதிக்கம், உயர்வு இங்கு வேண்டாம். திராவிடர்கள் இங்கு "நான்காவது ஜாதி"யினராக இருக்கின்றார்கள். திராவிடரல்லாத ஒரு கூட்டம் முதலாவது ஜாதியாக இருக்கின்றது. நூற்றுக்குத்

தொண்ணூறு பங்காகவுள்ள திராவிட இனம் இன்று, சட்டத்திலே சாஸ்திரத்திலே, சூத்திரனாக, பஞ்சம இழிமகனாக வாழ்கின்றது. திராவிடன் மனிதனாக வாழவேண்டாமா? திராவிடநாடு இழி மக்கள் இல்லாதநாடு ஆகவேண்டாமா? இக்காலத்திலே "சிம்மாதனத்திலோ, மகுடத்திலோ" மதிப்பில்லை ஜனநாயக ஆட்சியே இக்காலத்திற்குத் தேவை" எனப்படுகிறது. நாணயம், ஒழுங்கு, மனிதத்தன்மையுடன் யார் வேண்டுமானாலும் அதிகாரம் செலுத்தட்டும். இன்றைக்கு அரசாளவும் இருக்கட்டும், நீதி, நேர்மை, சமத்துவ ஆட்சிதான் நமக்கு வேண்டும். ராமாயணத்தில் சொல்லப்படுவது போன்று ஒரு ஜதை செருப்பு ஆண்டாலும் நமக்குக் கவலை இல்லை ஆனால் சாஸ்திரத்திலே, சட்டத்திலே, நடைமுறையிலே நமக்கும் நம் உழைப்பாட்டாளியான மக்களுக்குமிருக்கும் சூத்திரப் பட்டம் ஒழியவேண்டும். சேரம் பேறி அயோக்கியர்களுக்கு இருக்கும் பிராமணோத்மப் பட்டம் ஒழியவேண்டும். சாஸ்திரத்திலே, மதத்திலே, கடவுளிலே, ஜாதி இருப்பதை, பிரிவு இருப்பதை, பிறவி இழிவு இருப்பதை ஒழித்துவிடுவதாகக் காங்கிரஸ் எங்கேயாவது கொள்கை, திட்டம் இருக்கின்றனவா? எப்போதாவது எந்தத் தலைவராவது சொன்னார்களா? காந்தியாருக்கு இப்போழுது வேண்டுமானாலும் தந்திகொடுத்துக் கேட்டுப் பாருங்கள். ஒப்புவாரா பார்க்கலாம் இராமன் காலத்தில் இருந்து தானே பறையன், சூத்திரன், பிராமணன் என்னும் மேல்கீழ் ஜாதிகள் இருந்திருக்கின்றன. சாமி கும்பிட்ட குற்றம்செய்த ஒரு சூத்திரன் கொல்லப்பட்டபிறகுதான் இறந்துபோன பார்ப்பனன் உயிர்பெற்றெழுந்ததாகப் புராணம் (இராமாயணம்) சொல்லுகின்றது! அரிச்சந்திரன் காலத்திலிருந்த பறையன் இன்றும் இருக்கின்றானே. ஆகவே இத்தகைய இழிவுகளைப் போக்குவதற்காகத்தான் திராவிடர் கழகம் ஓர் உண்மையான ஒப்பற்ற விடுதலை ஸ்தாபனமாக விளங்கி, வேலை செய்து வருகின்றது.

இந்தியா என்னும் இப்பரந்த உபகண்டம் சுமார் மூவாயிரம் மைல் நீளம், இரண்டாயிரம் மைல் அகலமுள்ளதாக இருக்கின்றது. இங்கு மக்களிடையே பண்டைக்காலந் தொட்டு இன்று வரையில் பல பேதங்கள் வளர்ந்துவந்துள்ளன. ஒருவர் வீட்டில் ஒருவர் சாப்பிடுவதில்லை, மணந்து கொள்வதுமில்லை. பல பாஷைகள், பல நாகரீகங்கள், பல உயர்வு தாழ்வுகள் ஆகிய வித்தியாசங்கள் இருந்து வருகின்றன. இத்தகைய பேதம் கொண்ட பிரதேசம் உலகத்தில் எங்குமே இல்லையே. இவ்வளவு வேற்றுமைக் கருத்துடைய ஒரு பெரிய உபகண்டத்தை ஒரே நாடு என்றும், ஒரே ஆட்சியில் இருக்கவேண்டுமென்றும் சொன்னால் இதை நாம் எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? நாம் கேட்கின்றபடி உபகண்டத்திலிருந்து திராவிடநாட்டைத் தனியாகப் பிரிக்கவேண்டுமென்றால் இதில் யாருக்கு, எந்த இந்தியனுக்கு என்ன அசௌகரியம் ஏற்படுகின்றது? திராவிடநாடு தனியாகப்பிரிந்தால், கிழக்கே கன்னியாகுமரி முதல் பர்ஹாம்பூர் வரையும் மேற்கே பம்பாய் வரையில் ஆயிரம் மைல் நீளமுள்ள துறைமுகம் நமக்குக் கிடைக்கின்றது கிழக்கரை முதல் சிக்மகளூர் வரை அகலமான ஆறுகள், அகன்ற அணைகள், ஏரிகள், உயர்ந்த நஞ்சை நிலங்கள், முத்துக்கொழிக்கும் கடல்கள் தங்கம் விளைகின்ற பல சுரங்கள் மலைகள் நமக்குண்டு இத்தகைய திராவிடநாட்டை அதிலுள்ள ஐந்து (5) கோடி மக்களுக்காகப் பிரித்தால் இந்த திராவிட மக்களுக்கு என்ன கஷ்டம் இருக்க முடியும்? சிறிய சிறிய நாடுகளாகிய, துருக்கி, கிரீஸ், ஸ்வீடன், லட்வேனியா, லுதுவேனியா, சுவிட்சர்லாந்து, டென்மார்க், பெல்ஜியம், அயர்லாந்து முதலிய 20, 30-நாடுகள் தனித்தனி வல்லரசாக விளங்கவில்லையா? நாம் தனி ஆட்சியாக ஏன் இருக்க முடியாது? இப்படிப்பட்ட நமது நாட்டுக்குத்தான் நாம் பூர்ண சுயேச்சை கேட்கிறோம்.

[தொடரும்]

## நீத்தார் நினைவுநாள்

வாழ்குடைத் திராவிடர் கழகத் தலைவர் தோழர் வி. எஸ். கிருஷ்ணசாமி அவர்களின் தாயார் இயற்கை யெய்தியதையொட்டி 22-9-46ல் நீத்தார் நினைவுநாள் தோழர் வி.எம். தங்கவேலு அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் கொண்டாடப்பட்டது. தலைவர், குப்பம்மாளின் படத்தைத் திறந்துவைத்தார். பின்னர் வி சுப்பிரமணியன், அண்ணாமலை ஆகியத் தோழர்கள் பேசினார்கள். குடி அரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது.

## பிறப்பு

25-9-46ல் தூத்துக்குடி மேலச் சண்முகபுரம், திராவிட கழகத் தோழர் எ. வேதநாயகம் அவர்களின் வாழ்க்கைத்துணைவியார் சித்திரக் கனிஅம்மாள் அவர்களுக்கு ஓர் பெண் குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம். குழந்தைக்குத் தமிழ்க்கொடி என்று பெயரிடப்பட்டது. அதன் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகிய பத்திரிகைகளுக்கு முறையே 2-ரூபாய் வீதம் நன்கொடை யளிக்கப்பட்டது.

• •

26-9-46ல் பழனியில் மதராம் மியூசிகல் ஸ்டோர்ஸ் உரிமையாளரும் திராவிடர் கழகத் தோழருமான டி. வி. அய்யாத்துரை அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் தோழியர் பாலம்மாள் அவர்களுக்கு ஓர் பெண் மகவு பிறந்தது. தாயும் சேயும் நலம். குழந்தைக்குத் தமிழரசி என்ற பெயர் சூட்டப்பட்டது. அதன் நினைவாக மத்திய திராவிடர் கழக நிதிக்காக 5-ரூபாய் நன்கொடை அளிக்கப்பட்டது, என்று பழனி, திராவிடர் கழகச் செயலாளர் தோழர் எ. வையாபுரி அவர்கள் அறிவிக்கின்றார்.

---

15-9-46ல் பெங்களூர் திராவிடர் கழகத்தின் சார்பில் கன்டோன்மென்ட் ஆர்க்காடு நாராயணசாமி முதலியார் சவுக்கில் தோழர் லிங்கப்பா அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. சி. டி. டி. அரசு, என். வி. நடராசன் ஆகிய தோழர்கள் திராவிடநாட்டுப் பிரிவினை என்பதுபற்றி மிக விளக்கமாகப் பேசினார்கள். காங்கிரஸ்காரர்கள் உள்பட ஏராளமான மக்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர். தோழர் எஸ். பார்த்தசாரதி அவர்கள் நன்றி கூறினார்.

# சேலம் அம்மாபேட்டையில் காங்கரஸ் காலிகளின் அட்டகாசம்

சேலம், அக். 9—

காந்தியாரின் 78வது ஆண்டு கொண்டாட்டவிழா சேலத்தில் கொண்டாடுவதை முன்னிட்டு சேலம் அம்மாபேட்டையிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலம் கடலூர் ரோடு வழியாக வரும்போது ஷெட்ரோட்டின் தென்பக்கத்திலுள்ள கந்தசாமி செட்டியார் தெருவில் திராவிடர் கழகக் கொடிகள் பறந்துகொண்டிருந்ததை ஊர்வலத்தில் வந்துகொண்டிருந்த காங்கரஸ் காலிகள் கண்டனர். உடனே அவர்கள் அத்தெருவிற்குள் புகுந்து வீடுகளின் மேல் கட்டப்பட்டிருந்த கருப்புக்கொடிகளை இறக்கி, கொளுத்திவிட்டனர். வீடுகளின் மேல் ஏறி ஓடுகளைப் பெயர்த்து நாசப்படுத்தியது மாத்திரமன்றி வீட்டின் சிற்சில பாகங்களைப் கடப்பாறைகளால் இடித்துத் தள்ளினர். கடப்பாறைகளில் வர்ணக்காகிதங்களைச்சுற்றி அதில் கதர்க்கொடிகளைக் கட்டி, காண்பார்க்கு, கதர்கொடி கழிகளில் கட்டியிருப்பதாகக் காட்சியளிக்கும்படி கடப்பாறையைக் கையில் பிடித்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் கூமிட்டி நரசிம்ம செட்டித் தெருவிற்குள் சென்று அத்தெருவில் மரத்தில் கட்டிப் பறக்கவிட்டிருந்த திராவிடர் கழகக் கொடியை இறக்கி அதைக் கொளுத்தியும், வீடுகளைக் கடப்பாறைக்கொண்டு சேதப்படுத்தியும், பெண்களை இழிவாகப் பேசியும், நூற்கட்டுகளைக் கொளுத்தியும் காலித்தனம் செய்தனர்.

பின்னர் கருப்புச்சட்டையணிந்துசென்ற பனகால் திராவிடகழகச் செயலாளர் தோழர் ஓ. ஆர். சீதாராமன் அவர்கள் பலப்பட்டறை மாரியம்மன் கோயிலுக்கருகில் கடுமையாகத் தாக்கப்பட்டார். மேலும் அக்கோயிலுக்கு வடக்குப் பக்கத்திலிருக்கும், ராஜ கணபதி தெருவில் பறந்துகொண்டிருந்த கணக்கற்ற திராவிடர் கழகக் கொடிகளைக் கொளுத்தியும், திராவிடநாடு திராவிடருக்கே என்று எழுதப்பட்டு வீட்டின் முன்னால் வைக்கப்பட்டிருந்த தகரங்களை நாசப்படுத்தியும், வீட்டில் தொங்கவிடப்பட்டிருந்த நமது இயக்கத் தலைவர்களின் படங்களைச் சேதப்படுத்தியும், பெண்களை இழிவாகப் பேசியும் காங்கரஸ் காலிகள் அட்டகாசம் செய்தனர்.

ந. நி.

## திராவிடர்கழக அமைப்புக் கூட்டம்

29 9-46ல் வெங்கட்டாசல புரத்தில் தோழர் தீ அ. வீரமுத்து அவர்கள் தலைமையில் கூடிய திராவிடர் கழக அமைப்புக் கூட்டத்தில் தோழர் அ. இருதயசாமி தலைவராகவும், தோழர் ஆரோக்கியசாமி துணைத் தலைவராகவும் தோழர்கள் சவரியார் ராஜமாணிக்கம் ஆகியோர் செயலாளர்களாகவும், தோழர்கள் ஞானப்பிரகாசம், ஜெபமாலை தேவசகாயம் அருணாசலம் ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## இனப்புரட்சிக் கழகம்

30-9-46ல் கொழும்பில் வெக்ஷால் வீதி 96 நெ மங்கள விலாசில் இனப்புரட்சிக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது. தோழர் ஆர். சுந்தரம் தலைவராகவும், தோழர் பி பெருமாள் செயலாளராகவும், தோழர் இ. குணசீலன் பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## காலித்தனத்திற்கு எல்லை இல்லையா?

29-9-46ல் மதுரை மாவட்டம் எம் எல். ஏ, தோழர் சின்ன ஹாஜியார் அவர்கள் அபிராமம் என்ற ஊருக்குக் கொடியேற்ற விழாவிற்குத் தன் காரில், தன் தோழர்களுடன் சென்றுகொண்டிருந்ததாகவும், வழியில் முஸ்லிம்கள் குறைந்த எண்ணிக்கையினராயுள்ள திருப்பூவனம் புதூர் என்ற ஊரில் அன்று மாலை சுமார் 3-மணிக்கு எதிர்பாரா நிலையில் காங்கரஸ் காலிகளால் தோழர் ஹாஜியார் அவர்கள் தாக்கப்பட்டதாகவும், காங்கரஸ் காலிகள் காரில் பறந்துகொண்டிருந்த முஸ்லீம் லீக் கொடியை முஸ்லிம் லீக் ஒழிக என்ற கூக்குரலிட்டுக் கொளுத்தியும் கற்களைக்கொண்டு காரிலுள்ள கண்ணாடிகளை உடைத்தும், தோழர் ஹாஜியார் அவர்களை நன்றாக அடித்தும், கொள்ளை கூட்டத்தினர் போல் காலித்தனம் செய்தனர் என்றும், திருப்பூவனம் புதூர் (R D) இஸ்லாமிய தினகர இளைஞர் சங்கத்தார் அறிவிக்கின்றனர்.

மேற்கண்ட நிகழ்ச்சி நடைபெற்ற அதே தேதியில் (29-9-46) இரவு சுமார் ஒரு மணிக்கு ஒட்டுப்பட்டி என்ற ஊரில் பறக்கவிடப்பட்டிருந்த திராவிடர் கழகக் கொடியைச் சில காங்கரஸ் காலிகள் களவாடிச் சென்றுவிட்டதாகவும், களவாடிச் சென்றதாகச் சந்தேகப் படுவதற்குரிய சில நபர்களைப்பற்றி வத்தலக்குண்டு போலீசாருக்குத் தகவல் கொடுத்திருப்பதாகவும் ஒட்டுப்பட்டி தோழர் கே. கருப்பணன் அவர்கள் அறிவிக்கின்றார்.

## சீர்திருத்த நாடகம்

சேலம் செவ்வாய்ப்பேட்டை திராவிட நாடக சபையாரால் தோழர் கே. எஸ் ராசகோபால் அவர்களை ஆசிரியராகக்கொண்டு பயிற்றுவிக்கப்பட்ட 'அந்தமான்கைதி', 'கமலா அல்லது காதல்மணம்' என்ற இருசமூகச் சீர்திருத்த நாடகங்களும் அக்டோபர் திங்கள் இறுதிவாரத்தில் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்தப்படும் என்று தோழர் ஆர். வி. வரதராஜுலு அறிவிக்கின்றார்.

குடி அரசு.

1946 ௵ அக்டோபர்௴ 12௳

# திராவிடர்களே இன்னுமா தீபாவளி?

வழக்கம்போல் பஞ்சாங்கத்தில் தீபாவளி வரப்போகிறது. சுமார் 20-வருட காலமாகத் தீபாவளியைப்பற்றி திராவிட மக்களுக்கு விளக்கிக்கொண்டு வந்திருக்கிறோம். திராவிடநாடு தனி சுதந்தரநாடாக ஆக்கப்பட்டு திராவிடர்கள் சமயம் எது? அவர்கள் சரித்திரம் என்ன? அவர்கள் மனிதத் தன்மை பெறுவதற்கு ஏற்ற வண்ணம் நடத்தப்படுவதற்கு வகுக்கப்பட வேண்டிய முறை என்ன? என்பவைகளை அரசியல் சட்டமூலமாகவும், பள்ளிப்பட மூலமாகவும் ஏற்பாடு செய்து அமல் நடத்துகிறவரையிலும் திராவிடர்கள் தங்களை இழிவுபடுத்தி நிரந்தரமாய் அழுத்திவைக்கப்பட்டிருக்கும் தன்மையிலிருந்து மீட்கப்படமுடியாது என்பதோடு திராவிடர்கள் தங்களைத் தாங்களே இழிமக்களாக ஆக்கிக்கொண்டு தங்கள் பின் சந்ததிகளையும் இழிதன்மையில் இருந்து மீளாமல் இருக்கத்தக்க காரியங்களைச் செய்துகொண்டுதான் இருப்பார்கள்.

இன்று திராவிடர்களின் சமயம் அதாவது மதம் என்பது பெயரளவில் இந்துமதம் என்று சொல்லப்பட்டாலும், அதற்கு எவ்வித பொருளும் ஆதாரமும் இல்லையென்றாலும் உண்மையில் திராவிடர்கள் மதம் என்பது ஆரியப் புராண மதமேயாகும். கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் முதலாகிய இந்துக்கள் அல்லாத மற்ற வேறு எந்தச் சமயக்காரர்களுக்கும் மதங்கள் உண்டு என்றால் அவைகள் பைபில் மதம், (அதாவது சத்திய வேத மதம்) குரான் மதம் (திருக்குரான் படி நடக்கும் மதம்) என்றெல்லாம் பெரிதும் சொல்லப்படுமே ஒழிய வேறுவிதமாய் இருப்பதில்லை. ஆனால் திராவிடர்கள் தங்களை இந்து மதஸ்தர்கள் என்று சொல்லிக்கொண்டாலும் அப்படிச் சொல்லிக்கொள்ளுகிறவர்கள் அத்தனை பேர்களும் ஆரியப் புராண மதக்காரர்களாகத்தான் இருந்தும், நடந்தும் வருகிறார்களே தவிர தங்களுக்கு என்று வேதமோ சாஸ்திரமோ இல்லாதவர்களாகவே இருந்து வருகிறார்கள்.

திராவிடர்களுக்கு (வேதம் கிடையாது. இருப்பதாகச் சொல்லப்படுமானால் அது திராவிடர்களுக்கு சம்மந்தப்பட்டதல்லவென்றும் திராவிடர்கள் பார்க்கவோ தெரிந்துகொள்ளவோ கூடியது அல்லவென்றும்தான் சொல்லப்படுமே ஒழிய திராவிடர்களுக்குரிய வேதம் கிடையாது. திராவிட வேதம் என்று எதையாவது சொல்லப்படுமானால் அது திராவிடர்கள் பின்பற்றுகிற—நடத்தப்படுகிற தன்மைக்கும், நடப்புக்கும் கட்டுப்பட்டதுமல்ல; பின்பற்றச்செய்வதுமல்ல.

திராவிடர்களுக்கு ஏதாவது சாஸ்திரங்கள் இருக்குமானால் அவை திராவிடர்கள் இன்னமாதிரியாய் நடத்தப்பட வேண்டியவர்கள் என்றும், நடத்தப்பட வேண்டும் என்றும், திராவிடரல்லாத மற்றவர்களுக்கு அதிகாரம் அளிப்பதும், ஆக்கினை இடச்செய்வதுமான சாஸ்திரங்களே ஒழிய திராவிடர்கள் தாங்களாக நடந்துகொள்ளுவதற்கு ஏற்றதான சாஸ்திரங்கள் அல்ல. ஆகவே திராவிடர்களாகிய நாம் சமயம் வேதம் சாஸ்திரம் ஆகிய எவையுமில்லாத ஒரு நிபந்தனையற்ற—திக்கற்ற அடிமை சமுதாயமாக இருந்துவருகிற ஒரு இழிவான, தாக்கப்பட்ட சமுதாயஸ்தர்களேயாவோம். இந்தப்படியான இழிவை நிலை நிறுத்தவும் திராவிடர்கள் தாங்களே அந்த இழிவை சிறிது நேரமாகிலும் இறக்கி வைக்காமல் சதா சுமந்துகொண்டே இருக்கச் செய்வதற்குமாக ஆரியர்களால் (எதிரிகளால்) ஏற்படுத்தப்பட்ட புராணங்களைப் பின்பற்றி நடப்பவர்களாக, இருப்பவர்களாகவே இருந்து வருகிறோம்.

இனி புராணங்களின் கருத்து என்ன என்று பார்ப்போம்.

திராவிடர் ஆரியர் என்கின்றதான (தேவர்கள்—அசுரர்கள் என்கின்ற) இரு இனங்களைக் குறிப்பிடுவதும் திராவிடர்களை (அசுரர்களை) ஆரியர்கள் (தேவர்கள்) இழிவுபடுத்தி, அடிமைப்படுத்தி, கீழ்மைப்படுத்திக் கொண்டதாகக் கற்பனை செய்யப்பட்ட கற்பனைச் சித்திரங்கள் அல்லாமல் மற்றபடி புராணங்களைப்பற்றிச் சொல்லவோ அதைப் பின்பற்றவோ புராணங்களில் என்ன இருக்கிறது என்று யாராவது சொல்ல முடியுமா?

"தேவர்களை அசுரர்கள் தொல்லைப்படுத்தினார்கள், சிவன், விஷ்ணு, என்கின்ற கடவுள்கள் தோன்றி அசுரர்களை வெற்றிகொண்டு, தேவர்களுக்கு அடிமையாக்கிக் கொடுத்து, தேவர்களைக் காப்பாற்றினார்கள்" என்கின்றதாகவேயில்லாமல் மற்றப்படியான மனிதர்களுக்கு வேண்டியதான அறிவோ ஒழுக்கமோ, நீதியோ, நாணயமோ எந்தப் புராணங்களிலாவது கடுகளவு காணமுடிகிறதா?

ரோஜா முத்தையா

அப்படிப்பட்ட புராணங்களில் காணப்படும் நடப்புகளைக் கொண்டாடுவதும் அவைகளில் சொல்லப்பட்டபடி நடப்பதும்தான் இன்று திராவிடர்களின் சமயமாக, நடப்பாக இருக்கிறது என்பதை எடுத்துக்காட்டவே இவ்வளவு சொன்னோம்.

இப்படியாகச் சொல்லப்படுபவைகளுக்கு ஒரு உதாரணம்தான் திராவிட மக்கள் தீபாவளி கொண்டாடுவது என்கின்றோம். இதை 20-வருடங்களுக்கு மேலாகச் சொல்லி வருகிறோம் என்பதை மேலே கூறினோம். அப்படி இருந்தும் இன்னமும் திராவிடர்கள் தீபாவளி கொண்டாடுகிறார்கள் என்பதைக் கருதியே இனியாவது கொண்டாடாதீர்கள் என்று வேண்டிக்கொள்ளுவதற்கு ஆகவே இந்த ஆண்டும் சொல்லுகிறோம்.

தீபாவளி என்பது என்ன? என்று பாருங்கள். திராவிட நாட்டில் பிராக் சோதிடபுரி (வங்காளத்துக்கு பக்கத்தில் இருந்ததாம்) என்ற ஒரு நகரம் இருந்ததாம். அந்த நகரத்தை நரகாசூரன் என்று ஒரு அரசன் ஆண்டானாம். அவன் யார் என்றால் ஒரு பன்றி பூமியைப் புணர்ந்து பூமியைக் கர்ப்பமாக்கி, அந்த பூமியால் பெறப்பட்ட ஒரு அசுரனாம். அந்தப்பன்றி யார் என்றால், மகாவிஷ்ணு பன்றியாக அவதாரமெடுத்த பன்றியாம். இந்தப்பன்றிக்குப் பிறந்தவன் என்பதாக அந்த அரசனுக்கு ஒரு இழிவைக் கற்பிக்கத்தான் இந்தக் கதையைக் கற்பித்து புராணங்களில் ஒட்டவைத்திருக்கவேண்டுமே அன்றி மற்றபடி கடவுள் மலம் தின்னும் பன்றி உருவெடுத்ததும் அந்தப் பன்றி நிலத்தை (தரையை, பூமியை) புணருவது என்பதும் அந்த நிலம் கர்ப்பமாகி பிள்ளையைப் பெற்றது என்பதும் எப்படி அப்படியே நம்பக் கூடியதாக இருக்க முடியும்?

ஆகவே இதன் இரகசியம் என்ன என்றால் திராவிட நாட்டு எல்லையில் பிறந்தவர்கள் அத்தனை பேரும் இழிமக்கள் என்பதைக் குறிப்பதற்காக அந்தநாட்டு மக்களாகிய திராவிட இனத்தினரைப் பன்றிக்கு பிறந்தவர்கள் என்று ஆதாரத்தை ஏற்படுத்தினார்கள் என்றுதான் சொல்லவேண்டும். அந்த அரசன் தேவர்களைத் (ஆரியர்களை) தொல்லைப் படுத்தினான் என்பதாகச் சொல்லி அவன்மீது பழியேற்படுத்தி அவனை விஷ்ணு கொன்றார் என்றும் அக்கொலைக்கு விஷ்ணுவின் மனைவி சத்தியபாமை உதவி செய்தாள் என்றும் என்ன என்னமோ ஆபாசக் கதைகள் கட்டி இருக்கிறார்கள். அதிலும் அந்த விஷ்ணு என்பவர் கிருஷ்ணன் என்கிற ஒரு மனிதன்தானாம். அந்த மனிதன் இலட்சக்கணக்கான பெண்களை மணந்தவனாம் பல இலட்சக்கணக்கான பெண்களைப் புணர்ந்தவனாம். நரகாசூரனைக் கொன்று அவனுடைய 10 பெண்களையும் மணந்தவனாம். இன்னமும் இப்படிப்பட்ட ஆபாசங்கள் ஒரு வண்டிக்குமேல் ஏற்றும்படியான சேதிகளைத்தான் இந்தப் புராணங்கள் கொண்டிருக்கின்றன.

இப்படிப்பட்ட புராணங்களை சமய ஆதாரங்கள் என்று ஏற்றுக்கொண்டு, அதில்வரும் சம்பவங்களைப் பின்பற்றுவது புண்ணிய காரியமென்று கருதிக் கொண்டு அப்படிப்பட்ட நரகாசூரன் கொல்லப்பட்டதற்கு மகிழ்ச்சி அடைந்து கொண்டாடுவதுதான் நமது தீபாவளி பண்டிகை என்றால் இந்தக்கதை எப்படி இருந்தாலும் இந்தக் கொண்டாட்டம் (தீபாவளி) நாம் கொண்டாடுவது நமக்கு (திராவிடனுக்கு) மானமும் அறிவுமுடையதாகுமா? என்று கேட்கிறோம்.

ஆகையால் தீபாவளியை

## தோழர் என். அர்ச்சுனன் மறைவு

பழயகோட்டை இளையபட்டக்காரரும், காலஞ்சென்றராய் பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாரின் இளையமகனாரும், ஊத்துக்குழி ஜமீன்தார் அவர்களின் மைத்துனரும், தோழர் வி. சி. வெள்ளியங்கிரி கவுண்டர் அவர்களின் உடன் பிறந்தாரின் மருமகனாரும், திராவிடர் கழகத் துணைத்தலைவரும், திராவிடர் கழக நிதிக் கமிட்டித் தலைவரும், கோவை மாவட்ட சாரணரியக்க உதவி கமிஷனருமான என். அர்ச்சுனன் இன்று (12-10-46) காலை 6 மணிக்குத் தன் பங்களாவில் இயற்கை யெய்தினார்.

சென்னை டாக்டர்கள் குருசாமி, பாலகிருஷ்ணன் ஆகியோரும், கோயமுத்தூர் டாக்டர் ராமசாமி அய்யரும், ஈரோடு அரசியலார் வைத்திய சாலை டாக்டர் லெப்டினன்ட் கர்னல் மேனன் அவர்களும் ஈரோடு டாக்டர் என். கே. முத்துசாமி அவர்களும் அர்ச்சுனன் சில நாட்களாக நோய் வாய்பட்டு வருந்தியகாலை சிகிச்சைசெய்து வந்தனர். எனினும் பயனில்லை.

அர்ச்சுனன் 23-வயது நிரம்பிய வாலிபர். அர்ச்சுனன் பிரிவுற்றமையால் அவரின் இரு குழந்தைகள், மனைவியார், நண்ணிருந்த சுற்றத்தார், கணக்கற்ற திராவிடக்கழக நண்பர்கள் ஆகியோர் எல்லையில்லாத் துயரப்பட்டு வருந்துகின்றனர்.

திராவிடர்களாகிய நாம் வெறுக்கும் தினமாகக் கருதி, திராவிடத் தோழர்கள் அன்றையதினம் பழைய கருப்பு உடைகளை, சட்டைகளை அணிந்து துக்கம் கொண்டாடும் பாவனையாய் இந்த இழிவு, பித்தலாட்டம், புராண ஆபாசங்கள் ஒழிய வேண்டும் என்கின்ற ஒலியுடன் ஊர்வலம்வந்து இந்தக் கதையை மக்களுக்கு எடுத்துச்சொல்லி உண்மை உணரும்படி செய்ய வேண்டியது கடமையாகும்.

மற்றபடி அன்று எண்ணெய் முழுக்கு, புதுவேஷ்டி அணிதல், வீட்டில் பலகாரம் செய்து சாப்பிடுதல் முதலியவை அடியோடு ஒழிக்கப்பட வேண்டும்.

"தீபாவளி கொண்டாட வேண்டாம். அது திராவிடரை இழிவுபடுத்தி மூடனாக்கும் ஆரிய சூட்சி" என்பதை மக்கள் உணரும்படி துண்டுநோட்டீசு எழுதுதல்மூலம் மக்களுக்கு விளக்கவேண்டும். இதைப் பெரிதும் கருப்புச்சட்டைத் தொண்டர்கள் செய்யவேண்டும். இப்போதிருந்தே பொதுக் கூட்டங்கள்மூலம் தெளிவு படுத்தவேண்டும்.

இந்தக்கூட்டத்தில் ஆரியப் பேச்சு, காங்கரஸ், கம்யூனிஸ்ட் முதலிய கட்சி பேச்சு சிறிதும் பேசக்கூடாது. தீபாவளி கொண்டாடாதவர்கள் தங்கள் பெயர்களை எழுதி அனுப்பச் செய்ய வேண்டும். என்பவைகளைக் கவனிக்க வேண்டுகிறோம்.

குறிப்பு:- ஆங்காங்குள்ள திராவிடப் புலவர்களைக் கொண்டு தீபாவளிக் கதையைத் தெரிந்து கொள்ளலாம்.

# இருபதாம் ஆண்டு

கரடுமுரடான வழி. அவ்வழியில் வீரனொருவன் விரைந்து செல்கின்றான். வீரனை வழியிற் கண்டானொருவன் வீரனை நோக்கி 'பாதை பயங்கரமானது' என்றான். ஆனால் வீரன் கலங்கினானில்லை. அவனுக்கு வழிநெடுக பெரும் எதிர்ப்புகள்! ஒவ்வொரு எதிர்ப்பும் வீரன் உள்ளத்தில் உறுதியுண்டாக்கிற்று. உடல் வாட வாட உணர்ச்சியால் உந்தப்பட்டான். மெல்ல மெல்ல நடந்தான். இறுதியில் தான் நாடிச் சென்ற இடத்தைத் தொலை தூரத்திற் கண்டு களித்தான்.

அவ்வீரனின் நிலைமையே 'குடியரசு'க்கு உண்டாயுள்ளது என்றுரைத்திடின் மிகையாகாது. மாற்றாரும் இதை மறுக்கமாட்டார் என்பது உறுதி.

'குடியரசு' தோன்றியக்காலத்தில் அதற்கு எத்தனையோ வகையான எதிர்ப்புகள்! 'எத்தனை நாளைக்குக் குடி அரசு நாட்டில் உலவும்; யார் இதற்கு ஆதரவு காட்டுவார்கள்; ஓராண்டோ, ஈராண்டோ நடக்கலாம்' என்றெல்லாம் வம்பளந்தனர் வஞ்சகநெஞ்சமுடையார்.

நாட்டிலே தேசிய வுணர்ச்சி தவிர வேறு உணர்ச்சிக்கு இடமில்லை என்று கருதப்பட்டு வந்த காலத்தில் குடி அரசு தோன்றிற்று. குழவிப் பருவத்திலேயே தேசியப் பார்ப்பனரின் கோட்டையைத் தாக்கத் தொடங்கிற்று.

அக்காலத்தில் எல்லா துறைகளிலும் பார்ப்பனர்களே சீரும் சிறப்பும் பெற்று இன்பமுடன் வாழ்ந்தனர். திராவிடர்களுக்குச் சூத்திரப்பட்டம் தாராளமாக வழங்கப்பட்டு வந்தது; திராவிடர்கள் எல்லா துறைகளிலும் அடிமைப்படுத்தப்பட்டிருந்தனர். பொதுவாக, திராவிடர்கள் மானங்கெட்ட வாழ்வு வாழ்ந்து வந்தனர் என்றும் சொல்லலாம்.

அந்த நேரத்தில்தான் குடி அரசு தோன்றிற்று. இருட்டறையில் உழன்றுவந்த திராவிடர்களுக்கு அவ்வறையினின்றும் வெளியேறுவதற்கு வழி காட்டும் விளக்காகக் குடியரசு தோன்றிற்று. மானமற்று வாழ்ந்த திராவிடர்கள் மானமுடன் வாழ வழி வகுத்தது.

பரம்பரை பரம்பரையாகத் திராவிடர்களை அடிமைப்படுத்திய பார்ப்பனர் பதறினார்கள்; ஆத்திரமடைந்தனர். குடி அரசைப்பற்றித் தப்புப்பிரச்சாரம் செய்தனர். குடி அரசைத் தொலைத்துக்கட்ட பல சூழ்ச்சிகளையெல்லாம் கையாண்டனர். ஆனால் பலிக்கவில்லை. குடி அரசு நாளுக்குநாள் வளர்ந்து வந்தது. குழவிப்பருவத்தைக் கடந்து துள்ளிவிளையாடும் பருவத்தையும் கடந்து இப்போழ்து வாலிபப் பருவத்தையடைந்துள்ளது. குடி அரசுக்கு 19-வது வயது நிரம்பி 20-வது வயது பிறந்துள்ளது.

பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சிகளுக்கும், மதப்புரட்டர்கள் செய்த பித்தலாட்டங்களுக்கும், தேசியத் தோழர்களின் தீவிர எதிர்ப்புக்கும் குடியரசு ஆளாகி இப்போழ்து 20-வது ஆண்டை எய்தியுள்ளது. கரடுமுரடான பாதையில் சென்ற வீரன் வழியில் எழுந்த எதிர்ப்புகளால் உள்ளம் தளராது இறுதியில் தான் நாடிச்சென்ற இடத்தைத் தொலை தூரத்தில் கண்டது போல் குடியரசு பலவகை எதிர்ப்புகளையும் ஏற்று அவற்றால் அழிவுறாமல் மேன்மேலும் வளர்ச்சியடைந்து இறுதியில் 20ம் ஆண்டை எட்டிப்பார்த்துவிட்டது.

குடியரசு தன் 19ம் ஆண்டிலேயேதான் எந்த நோக்கத்திற்காகத் தோன்றியதோ அந்த நோக்கத்தில் ஓரளவில் வெற்றி பெற்றுவிட்டதென்னலாம். அந்த வெற்றியின் அறிகுறி பல உருவங்களில் நாட்டில் உலவி

வருகின்றது. ஆச்சாரியார் காமராசர் தகராறு அந்த வெற்றியின் அறிகுறிதான். "பிறப்பினால் உயர்வு தாழ்வு கூடாது; எல்லோரும் ஓர் குலம்; கடவுள் புராணம், மதம் முதலியவற்றால் மக்கள் மடையர்களானார்கள்" என்று தேசியத் தோழர் சிவஞான கிராமணியார் கூறுவதும் அதுவேதான். இன்று பாராளுமன்றத்திலே கூட குடியரசு கூறிவந்தவைகள் விவாதிக்கப் படுகின்றனவென்றால் குடியரசு எய்திய வெற்றியைக் கூறவும் வேண்டுமோ?

பல புயல் காற்றுகளிற் சிக்குண்டு, பல தொல்லைகளையெல்லாம் ஏற்று, அவைகளினின்றும் தப்பித்து இன்று இருபதாம் ஆண்டை அடைந்துள்ள குடியரசு இனிமேல்தான் தன் முழுக் குறிக்கோளையும் அடைய வேண்டிய நிலையிலுள்ளது. அதற்குக் குடியரசால் மானவுணர்வு பெற்று மக்களாக வாழும் மக்களின் ஒத்துழைப்பும் தேவை. பெரியார் இராமசாமி அவர்கள் 19 ஆண்டுகளுக்கு முன்னர் குடியரசைத் தோன்றுவித்த அன்று குடியரசின் நிலையையும், இப்போழ்து அஃது எய்தியுள்ள நிலையையும் சிந்தித்துப் பார்த்து, வருங்காலத்தில் அது கொண்ட குறிக்கோளை திராவிடர்கள் அனைவரும் நிறைவேற்றி வைப்பார்களாக. அதற்காகக் குடியரசு இதுவரையில் உழைத்து வந்தது போல் இனியும் சிறிதும் அச்சமின்றி உழைக்கும் என்று உறுதி கூறுகின்றோம்.

---

13-9-46ல் சங்கராயினார் கோவிலில் தோழர் நெடுஞ்செழியன் அவர்களும் தோழியர் அன்னபாக்கியம் அவர்களும் பதிவுத்திருமணம் செய்துகொண்டதின் நினைவாக குடியரசு திராவிடநாடு ஆகியவற்றிற்கு ஒவ்வோர் ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

# பொன்மலையில் போலீசார் அட்டூழியம்

## உத்தியோக பற்றற்ற விசாரணை வேண்டும்.

தென்னிந்திய இரயில்வே தொழிற்சங்கத்தின் தலைமைத் தலைவர்களான தோழர்கள் ஜெ. பி. புருஷோத்தமன், வி. எம். சுப்பிரமணியம் ஆகிய இருவரும் கீழ்க்காணும் அறிக்கையை விடுத்துள்ளனர்.

23-9-46 மாலை 6-30 மணிக்குத் திருச்சி தாலுக்கா சப்மாஜிஸ்ட்ரேட் அவர்கள் பொன்மலையிலிருந்த தென்னிந்திய இரயில்வே தொழிற்சங்கக் கட்டிடத்தையும் சொத்துகளையும் உள்ளூர் சப் இன்ஸ்பெக்டர் அவர்கள் முன்னிலையில் எங்களிடம் திருப்பிக்கொடுத்தார். அதுகாலை கட்டிடத்திலுள்ள பொருள்களைப்பற்றிய அட்டவணை தயார் செய்யப்பட்டது. அச்சு இயந்திரம், ஒலிபரப்பி, ரேடியோ டைப் இயந்திரம், மின்சார சம்பந்தப்பட்ட பொருள்கள், சைக்கில்கள், மேசை நாற்காலி முதலிய யாவும் பழுது பார்க்க முடியாத அளவில் நாசப்படுத்தப்பட்டுள்ளன ஒரு கார் உள்பட பல பொருள்கள் காணாமற்போயுள்ளன. சங்கத்தைப்பற்றிய குறிப்புப் புத்தகங்களும் இன்றியமையாத சேகரிப்புக் குறிப்புகளும், வாசகசாலை நூல்களும் இல்லை. எவ்வளவு இழப்பு என்ற முழு விவரத்தைச் சங்கம் பின்னர் அறிவிக்கும். இப்போது சுமார் 50,000 ரூபாய் மதிப்பிடக்கூடிய சொத்துகள் இழக்கப்பட்டுள்ளன. மேலே குறிப்பிட்ட இழப்பை ஈடுசெய்து கொள்ள அரசாங்கத்தாரைச் சங்கம் கேட்கும்.

மேலே குறிப்பிட்டவை மாத்திரமன்றி சங்கக் கூட்டங்களுக்கு வழக்கமாக வரும் தொழிலாளர்களுடைய பொருள்களும் அவர்களின் குடும்பத்தாரின் பொருள்களும் நஷ்டப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றிற்கும் அரசாங்கத்தாரிடம் நஷ்டஈடு கேட்கப்படும்.

சென்னை சட்டசபை எம். எல். ஏ., தோழர் கே. அனந்த நம்பியார் அவர்களின் வீடு கொள்ளையடுக்கப்பட்டுள்ளது கட்டிடங்களிலுள்ள எல்லா பொருள்களும் மிகுதியாகச் சேதப்படுத்தப்பட்டுள்ளன. பொதுமக்களும், தொழிலாளர்களும் செப்டம்பர் மாதம் 5ந் தேதி செய்த அக்கிரமங்களை அறிந்துகொள்ளும் வண்ணம் செய்வதற்காகவே இதை வெளிப்படுத்துகின்றோம். இதுவரையில் ஐவர் மாண்டனர். 200 தொழிலாளர்களுக்குமேல் காயம் பட்டனர். நாசப்படுத்தப்பட்ட சங்கக் கட்டிடங்களும் அவைகளிலுள்ள சொத்துகளும் போலீசார் எவ்வளவு மூர்க்கத்தனமாக நடந்துகொண்டனர் என்பதை நன்கு புலப்படுத்தும். 1946ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5ம் நாள் ஜில்லா போலீஸ் அதிகாரி (D. S. P.) ஹாரிசன் ஜாலியன்வாலா பாக் வரலாற்றை மீண்டும் பொன்மலையில் நடத்திக் காட்டினார் என்று கூறலாம். இவ்விழிச் செயல்கள் மக்களின் ஆதரவு பெற்ற காங்கரஸ் மந்திரிசபையாரின் ஆட்சியில் நடைபெற்றதுதான் மனம் மிகவும் புண்படும்படியாகவுள்ளது.

எனவே, பொதுமக்களும் தொழிலாளர்களும், கிசான்களும், மாணவர்களும் மற்ற இயக்கங்களும் சேர்ந்து பொன்மலைத் துப்பாக்கிப் பிரயோகத்தைப்பற்றியும் அதனால் உண்டான இழப்புகளைப்பற்றியும் உத்தியோகப் பற்றற்ற விசா

ரணை நடத்தப்படவேண்டுமென்று சென்னை அரசாங்கத்தைக் கேட்கும் வண்ணம் நாங்கள் வேண்டிக்கொள்கிறோம். மேலும் வேலை நிறுத்தத்தின் காரணமாக உயிரிழந்தவர்கள், காயம்பட்டவர்கள் ஆகியோரின் குடும்பத்தாருக்குதவி செய்யவும், சிறைச்சாலையிலடைக்கப்பட்டவர்களின் விடுதலைக்கு ஆவன செய்யவேண்டிய பொருள்கள் சேகரிப்பதற்காகவும் சங்கத்தாரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நிவாரண நிதிக்கு யாவரும் பொருளுதவி செய்ய வேண்டுமாயும் கேட்டுக்கொள்கிறோம்.

## திருமணம்

1-11-46 வெள்ளிக்கிழமை காலை 7-மணிக்கு என் மகள் திருநிறைச் செல்வி சுசீலாவிற்கும், சேலம் கிச்சிப்பாளையம் தோழர் ரங்கசாமி அவர்களின் மகன் திருநிறைச் செல்வன் நாராயணசாமிக்கும் மணமகன் இல்லத்தில் திருமணம் நடைபெறும். இயக்க [illegible] அழைப்பாகக்கொண்டு [illegible] திருமணத்திற்கு வந்து திருமணத்தைச் சிறப்பிக்குமாறு வேண்டுகிறேன்,

இங்ஙனம்,
கோண்டையா.

## வாழ்க்கை ஒப்பந்தம்

9-9-46 காலை சென்னை வண்ணை மணிகண்ட முதலி தெருவில் தோழர் வி. பி. மாணிக்கம் அவர்கள் தலைமையில் தோழர் எஸ். ஆர். சண்முகம் அவர்கள் மகள் தோழியர் தனலட்சுமியும், தோழர் கு. பி. சுப்ரமணியம் அவர்கள் மகன் தோழர் கே. எஸ். அருணாசலமும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். தளபதி அண்ணாதுரை, எ. பி. ஜனார்த்தனம், ம. பொ. சிவஞான கிராமணி ஆகிய தோழர்கள் திருமணம் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். குடியரசு வளர்ச்சிக்காக இரண்டு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

8-9-46ல் அய்யம்பேட்டையில் தோழர் எஸ். ஆர். சாமி அவர்கள் தலைமையில் தோழர் சோமசுந்தரம் அவர்களும், தோழியர் சைதாம்மாள் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாகக் குடியரசு, விடுதலை, திராவிடநாடு முதலிய பத்திரிகைகளுக்குத் தனித்தனியே ரூபாய் ஒன்று நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

30-9-46ல் எதுமலையில் தோழர் முத்து தனபால் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் தோழர் கே. என். வெங்கட்டராமன் அவர்களும், தோழியர் நீலவேணி அம்மையார் அவர்களும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். அதுகாலை திருச்சி தி. பொ. வேதாச்சலம், குடந்தை சின்னத்தம்பி, தஞ்சை எ. ஆர். சுப்பண்ணா, பாவலர் எ. என். பாலசுந்தரம் ஆகிய தோழர்கள் திருமணம் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள்.

0 0

9-9-46ல் கண்டியூர் தோழர் கந்தசாமி அவர்களும், ஏகாத்தங்குடி காலஞ்சென்ற தோழர் நம்பிதுரை அவர்கள் மகளும் கும்பகோணம் தோழர் லட்சுமிபதி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். டி. கே. சீனிவாசன், ரா. ரெத்தினசபாபதி ஆகிய தோழர்கள் பேசினார்கள். அதன் நினைவாகக் குடியரசுக்கு ஒரு ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

0 0

இராமநாதபுரம் மாவட்டம் குருந்தம்பட்டு தோழர் கு. அ. சண்முகம் அவர்களும் நாப்பந்திடல் தோழர் கன்னன் அவர்கள் மகள் தோழியர் சின்னம்மாளும் 12-9-46ல் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதின் நினைவாகக் குடியரசு வளர்ச்சிக்கு 2-ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## எத்திராஜ்-இராஜம்மாள்

30-9-46ல் சத்தியமங்கலத்தில் குடியரசு ஆசிரியர் தோழர் கரிவரதசாமி அவர்கள் திருமகன் தோழர் எதிராஜ் அவர்களும் சத்தியமங்கலம் தோழர் எ. கோவிந்தசாமி அவர்கள் திருமகள் தோழியர் இராஜம்மாளும் பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டனர். பெரியார் அவர்கள் சீர்திருத்த திருமணம் குறித்தும், பெண்கள் முன்னேற்றம் குறித்தும் சுமார் 2 மணி நேரம் சொற்பொழிவாற்றினார்கள். பின்னர் ஈரோடு நகராண்மைக் கழகத் தலைவர் ஆர். கே. வெங்கிடசாமி, ஈ. வி. கே. சம்பத், புலவர் கி. தியாகராசன், குமாரபாளையம் மிராசுதார் கே. எஸ். கிருஷ்ணசாமி, கோபி உயர்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் கே. எம். ராமசாமி, சத்தியமங்கலம் எஸ். எம். மகமத்கான் ஆகிய தோழர்கள் மணமக்களை வாழ்த்தி சொற்பொழிவாற்றினார்கள். திருமணத்திற்கு உள்ளூரிலிருந்தும், வெளியூர்களிலிருந்தும் சுற்றத்தாரும் நண்பர்களும் ஏராளமாக வந்து திருமணத்தைச் சிறப்பித்தனர். யாவருக்கும் மணமகளின் தந்தையார் தோழர் எ. கோவிந்தசாமி அவர்கள் நன்றி நவின்றார். தோழர் எ. கோவிந்தசாமி அவர்களால் குடியரசு, விடுதலை, திராவிடநாடு ஆகியவற்றின் வளர்ச்சிக்காகத் தனித்தனியே 2-ரூபாய் நன்கொடையளிக்கப்பட்டது.

## இயக்கச் செய்திகள்

4-9-46ல் நாசரேத் திராவிடர் கழகத்தின் சார்பில் தோழர் கே. வி. கே. சாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அது காலை பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் திராவிடர் கழகக் கொள்கையைப்பற்றியும் கருப்புச் சட்டைப்படை அமைக்கவேண்டியதின் இன்றியமையாமையைப் பற்றியும் 3 மணி நேரம் விளக்கமாகப் பேசினார்.

0 0

23-9-46ல் கோபிச்செட்டிபாளையத்தில் சென்னை தோழர் சி. டி. டி. அரசு அவர்கள் தலைமையில் நடந்த திராவிடர் கழகப் பொதுக்கூட்டத்தில் சென்னைத் தோழர் என். வி. நடராசன், விருதுநகர் தோழர் ஆசைத்தம்பி, தோழர் எ. பி. ஜனார்த்தனம் எம். ஏ., புலவர் ஆறுமுகம், மாணவர் சுப்பய்யா ஆகியோர் சொற்பொழிவாற்றினார்கள்.

Edited, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.